சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP.146/2013**

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் நாள் புதன்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைமணி | தொழில் | சமையல் வேலை |
| தந்தை பெயர் | அப்பாசாமி | ஜாதி | |
| கிராமம் | அம்மாபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 55 |

**25.06.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் 2ம் மனுதாரர் ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் வழங்கிய இறப்பு அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிணக்கூராய்வு அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவுச்சான்று உண்மை நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீடு சான்று உண்மை நகல் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்த அப்பாசாமியின் இறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் மனுதாரரின் இறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் மனுதாரரின் வாரிசு சான்று நகல் **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்பாசாமியின் வாரிசு சான்று நகல் **ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது) 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 2ம் மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் நகல் **ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது). 3ம் மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் நகல் **ம.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது).